(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு இ மதுசூதனன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

(குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

முற்பகல் 10 35 மணி

2. சிறப்புக் குறிப்பு

தற்காலிகத் தட்டச்சர்கள் சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்கள் உண்ணாவிரதம் இருந்தது குறித்தும் அவர்கள் கைது செய்யப்பட்டது குறித்தும்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசின் தற்காலிகத் தட்டச்சர்கள மற்றும் சுருக்கெழுத்தாளர்கள், இளநிலை உதவியாளர்கள் ஆகியோர் உண்ணாவிரதம் இருந்து வருவது குறித்தும், அவர்கள் கைது செய்யப்பட்டிருப்பது குறித்தும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென என் அனுமதியை, திரு. ஆர். சிங்காரம், திரு. பெ. பொன்னுசாமி, திருமதி ரமணி நல்லதம்பி, திரு. எஸ். எஸ். ராமசுப்பு, திரு. மா. சுந்தர தாஸ், திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், திரு. ஜி. பழனிசாமி, திரு. சி. ஞானசேகரன், டாக்டர் தே. குமாரதாஸ், ஆகியோர் கோரியுள்ளனர். அவர்களுக்கு அனுமதி வழங்கியிருக்கிறேன். அவர்கள் அனைவரின் சார்பிலேயும் திரு. ஆர். சிங்காரம் இப்போது பிரச்சினையைக் கொண்டு வருவார். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 20—4—1992 மற்றும் 21—4—1992 ஆகிய இரண்டு நாட்கள் தற்காலிகத் தட்டச்சர்கள் மற்றும் சுருக்கெழுத்தாளர்கள், இளநிலை உதவியாளர்கள் மாநில அளவில் சுமார் 1,500 பேர்களில் சுமார் 500 பேர்கள்

[திரு. ஆர். சிங்காரம்]

சென்னை குறளகம் அருகில் தங்களை நிரந்தரம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து, சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தார்கள். இதற்கு, 20 ஆம் தேதி மட்டும் போலீசார் அனுமதி தந்திருக்கிறார்கள். 21 ஆம் தேதி இவர்கள் அனைவரையும் கைது செய்யாமல் அனுப்பி விட்டார்கள். தாங்கள் கைது செய்யப்படவில்லையே, தங்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படவில்லையே என்பதற்காக, 22—4—1992 ஆம் நாள் இப்பணியாளர்களில் 161 ஆண்களும், 61 பெண்களும், சேப்பாக்கம் கலெக்டர் அலுவலகம் முன்பாக மறியல் செய்ததினால் அவர்கள் அனைவரையும் கைது செய்து, ஆண்களை சென்னையிலும், பெண்களை வேலூர் ஜெயிலிலும் 15 நாள் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அல்லாது பொது மருத்துவமனையில் 11 பேர்கள், கால்கள் இல்லாத இரண்டு ஊனமுற்றவர்கள் உட்பட ஆஸ்பத்திரியில் ட்ரிட் மெண்ட் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தயவு செய்து இவர்களைப் பரிவோடு, கனிவோடு விடுதலை செய்து இவர்களை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தி, அதன் மூலமாகச் சுமுக முடிவுக்குக் கொண்டுவர அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேநேரத்தில் கடந்த காலத்தில், டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்தில், அரசாணை எண். 996-ன்படி 12,000 தற்காலிகப் பணியாளர்களை நிரந்தரம் செய்த வரலாறு இந்தியாவிலேயே.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : கவனத்திற்குக் கொண்டுவருவதாகச் சொன்னார்கள். ஆனால் இப்பொழுது முழு விளக்கமும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. ஆர். சிங்காரம் : டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்தில் 12,000 பேர்களை ஒரே நேரத்தில் நிரந்தரம் செய்த பெருமை அன்றைய முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும், இன்றைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் உண்டு என்ற அடிப்படையில் அதே அரசு, தற்காலிகப் பணியாளர்கள் 1,500 பேர்களை நிரந்தரம் செய்யவும், கைது செய்யப்பட்ட அந்தப் பெண்களையும், ஆண்களையும் உடனே விடுதலை செய்யவும், அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989 ஜனவரிக்கும், 1991 ஜனவரிக்கும் இடையில் இருந்த முந்தைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது அமைச்சர்களுக்கு ஒரு சுற்றறிக்கை அன்று அனுப்பப்பட்டு, காலியாக உள்ள வேலை வாய்ப்புகளில் வேலை இல்லாமல் இருக்கிற இளையவர்களை மூன்று மாத கால அளவிற்கு மட்டும் 10 (எ) (1) விதிப்படி தற்காலிகமாக வேலையில் அமர்த்தலாம் என்று சொல்லப்பட்டது. அந்தச் சுற்றறிக்கையின் அடிப்படையில் 10 (எ) (1) விதியின்படி சிலர் தற்காலிக வேலையில் மூன்று மாதங்களுக்கு நியமிக்கப்பட்டார்கள். அவர்களும் மூன்று மாதங்களுக்கு மட்டுமே பணிபுரியக்கூடிய தற்காலிக வேலை என்று தெரிந்துதான், அந்த உணர்வோடு வேலையில் சேர்ந்தனர். வேலை வாய்ப்பு அலுவலகம் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்பட்ட, ஆனால் தமிழ்நாடு தேர்வாணைக் குழுவால விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்படாத சுமார் 800 தட்டச்சர்கள் மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள், இளநிலை உதவியாளர்கள் துறை அதிகாரிகளால் சரியாகக் கண்காணிக்கப்படாததன் காரணமாக 3 மாதங்களுக்குப் பிறகும் முறைப்படி வேலையிலிருந்து நீக்கப்படாமல், தொடர்ந்து தற்காலிகமாக வேலை செய்பவர்களாக இருந்துவிட்டார்கள். பிறகு சில காலம் கழித்து அந்த 800 பேர்களும் விதிமுறையின்படி தற்காலிக வேலையிலிருந்து அகற்றப்பட்டார்கள். விதிமுறைப்படி அப்படி அகற்றப்பட்டவர்களில் சுமார் 200 பேர்கள் 23—12—1991 ஆம் நாள் அன்று சேப்பாக்கம் மாநில அரசின் விருந்தினர் விடுதியின் முன்னால், தம்மை நிரந்தரமாக அரசுப் பணியில் அமர்த்த வேண்டும் என்னும் கோரிக்கையை வைத்து ஒரு நாள் உண்ணா நோன்பு இருந்தனர். மீண்டும் அவர்களில் சுமார் 30 பேர்கள் 24—3—1992 முதல் 4—4—1992 வரை தம்மை நிரந்தர அரசுப் பணிகளில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து தொடர் உண்ணா நோன்பு இருந்தனர். இந்த தமிழ்நாடு அரசு தற்காலிக தட்டச்சர்கள், சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்கள் சங்கத்தின் நிர்வாகப் பொறுப்பில் உள்ளவர்கள், பணியாளர்கள் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் செயலாளரைக் கண்டு கலந்துரையாடல் நடத்தினர். துறையின் செயலாளர் நடைமுறை நெறியினையும் விதிமுறைகளையும் எடுத்துச் சொல்லி நிலைமையைத் தெளிவுபடுத்தியுள்ளார். தேர்வாணைக் குழுவின் மூலமாக முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டாலொழிய தற்காலிகமாகப் பணியாற்றும் 10 (ஏ (1)

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்

பணியாளர்களை நிரந்தரப் பணியாளர்களாக நியமிக்க விதிமுறையின்படியும், 15-5-1991 ஆம் தேதியிட்ட அரசு ஆணையின்படியும் இடம் இல்லை என்பதை தெள்ளத் தெளிவாக எடுத்துச் சொல்லியுள்ளார். அப்படித் தெளிவு படுத்திய பிறகும சங்கத்தின் நிர்வாகத்தினர் 12—4—1992 அன்று கூடி 20—4—1992 முதல் குறளகத்திற்கு அருகில் அவர்கள் பணிகளை நிரந்தரமாக்க வேண்டும் என்ற கோரிக்கையை வற்புறுத்தி சாகும் வரையில் உண்ணா நோன்பு இருக்கப் போவதாக அறிவிப்புச் செய்தனர்.

முற்பகல் 10-40

மேற்படி சங்க நிர்வாகத்தினர் 20—4—1992 முதல் குறளகத்திற்கு அருகில் சாகும் வரையில் உண்ணா நோன் பினைக் கடைப்பிடிக்க அனுமதி தரவேண்டுமென்று காவல் துறையிடம் விண்ணப்பம் செய்தனர். சென்னை நகர காவல் துறை ஆணையாளர் 20-4-1992 அன்று, தொடர்ந்து சாகும் வரையில் உண்ணா நோன்பு இருக்க அனுமதி அளிப்பதற்கில்லை என்றும், ஒருநாள் மட்டும் வேண்டுமானால் உண்ணா நோன்பு இருக்க அனுமதி அளிக்கப்படும் என்றும் தெரிவித்தார்கள். சாவதற்கு யார் அனுமதி தருவார்கள் (சிரிப்பு) சுமார் 150 மகளிர் உள்ளிட்ட........

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள் இந்த விஷயத்தை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரும்போது இவர்கள சாகும் வரை உண்ணாவிரதம் இருநதார்கள என்றே குறிப்பிட்டார். ஆனால் அவர்கள் இன்னும் சாகவில்லை ; உயிரோடுதான் இருக்கிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 150 மகளிர் உள்ளிட்ட சுமார் 400 பேர்கள் 20-4-1992 அன்று ஒருநாள் உண்ணா நோன்பு இருக்கப் போவதாக, தங்கள் கோரிக்கையை வலியுறுத்தி உண்ணா நோன்பு தொடங்கினார்கள். ஒருநாள் உண்ணா நோன்புக்கு காவல் துறையினர் அனுமதி வழங்கினார்கள். ஆனால் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் வாக்குறுதியை மீறி ஒருநாள் உண்ணா நோன்பு இருந்தது என்பதை அன்று மாலையே மாற்றி தொடர்ந்து பல நாட்கள் சாகும் வரை உண்ணா நோன்பு இருக்கப் போவதாகக் கூறி உண்ணா நோன்பை நீட்டிக்க செய்தனர். காவல் துறையின் ஆணையை மீறி வேண்டுமென்று திட்டமிட்டு, சாகும் வரை உண்ணா நோன்பைத்

தொடர்ந்து இருக்க 117 மகளிர் உள்ளிட்ட 303 பேர்கள் முயன்றனர். அரசின் அங்கீகாரம் பெறாத தமிழ்நாடு அரசு பணியாளர் சங்கத்தின் செயலாளர் ஒருவர் சாகும் வரையிலான உண்ணா நோன்பைத் தொடங்கி வைத்தார். செய்தித் தாள்கள் மூலமாக விளம்பரப்படுத்தியும் கொண்டார். 5 மகளிர் உள்ளிட்ட 10 பேர்கள் உண்ணா நோன்பு காரணமாக மயக்கமுற்றனர். அவர்கள் 21—4—1992 அன்று மருத்துவ சிகிச்சைக்காக மருத்துவ மனைக்கு அகற்றப்பட்டனர். பின்னர் அன்று மாலையே 62 மகளிர் உள்ளிட்ட 210 பேர்கள் கைது செய்யப்பட்டனர். பின்னர் அவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டனர். 22—4—1992 அன்று 39 மகளிர் உள்ளிட்ட 156 பேர்கள் சென்னை சேப்பாக்கம் அரசு விருந்தினர் விடுதிக்கு முன்னால் முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டபோது காவல் துறையினரால் கைது செய்யப்பட்டனர். விதிகளுக்குப் புறம்பாக, முறைகேடான செயலுக்கு உண்ணா நோன்பு, ஆர்ப்பாட்டம், மறியல் போராட்டம், முற்றுகைப் போராட்டம் போன்றவற்றின் மூலம் வழிகாண வற்புறுத்த முயலுவது ஜனநாயக நெறி முறைகளுக்கு மாறுபட்டது. நோக்கம் தூய்மையானதாகவும், நெறிப்படியும் இருக்கவேண்டும். நோக்கம் மட்டும் அல்ல. நோக்கத்தை நிறைவேற்றுவதற்குக் கடைப்பிடிக்கிற வழிமுறைகளும் தூய்மையானதாகவும், நெறி கொண்டனவாகவும் இருக்கவேண்டும் என்று அண்ணல் காந்தியடிகளே பல தடவை எடுத்துச் சொல்லி இருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள் காந்தியடிகளை முழுக்க முழுக்க பின்பற்றுகிற ஒரு உறுப்பினர் என்பதை நாம் நன்றாக அறிவோம். எனவே தமிழ்நாடு அரசு தற்காலிகத் தட்டச்சர்கள், சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்கள் சங்கத்தினர் முறைப்படி தேர்வாணைக் குழுவின் தேர்வின் மூலம் அரசுப் பணிகளில் நிரந்தரமாக அமர ஆவன செய்வார்களாக.

திரு. ஆர். சிங்காரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் ஜெயிலில் இருக்கிறார்கள்.........(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.

***திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறையில் இருக்கிற அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைத்தார். அதனை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், அவர்களை விடுதலை செய்யவேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறையில் இருப்பவர்களை உடனடியாக விடுதலை செய்ய ஆணையிடுகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. விதி 110-இன் கீழ் முதலமைச்சரின் அறிக்கைகள்

(அ) உறுப்பினர் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் வீட்டை வெடிகுண்டு வைத்துத் தகர்க்க சிலர் முயற்சித்தது குறித்தும், அது குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதி 110-ன் கீழ் ஊதியக் குழு பரிந்துரை மீது அரசின் நடவடிக்கை பற்றியும், மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்கள் தன்னுடைய வீடு தகர்க்கப்பட சிலர் முயற்சி செய்ததாக இந்தப் பேரவையில் தெரிவித்த ஒரு கருத்து (குறுக்கீடு) குறித்தும் ஆக இரண்டு அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுள்ளார்கள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்கள் எழுப்பிய பிரச்சினை பற்றி ஒரு அறிக்கையை முதலிலேயும், அடுத்து ஊதியக் குழு மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய இன்னொரு அறிக்கையை அடுத்தும் பேரவைக்கு இப்போது அளிப்பார்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்கள் கடந்த 24—3—1992 அன்று இம்மாமன்றத்தில் உரையாற்றும்போது தன்னுடைய சொந்த ஊரான அழகம்பட்டியில் உள்ள தனது வீட்டை பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த திரு. சிங்கம் வெடிகுண்டு வைத்துத் தகர்க்க முயற்சிகள் மேற்கொண்டதாகத் தெரிவித்தார்கள். அன்றே நான் அவர்கள் கூறிய விவரங்கள் குறித்து விசாரிக்கப்பட்டு அதன் மீது தக்க நடவடிக்கைகள் எடுக்கப் படும் என்று தெரிவித்தேன். அதன் தொடர்பாக சில முக்கிய விவரங்களை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்க நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்கள் கூறிய விவரங்கள் பற்றி விசாரிக்கவும், நடவடிக்கைகள் தொடரவும், உயர் மட்ட காவல் துறை அதிகாரி ஒருவரை அனுப்பி வைக்க ஆணையிட்டேன்.